[1982 மார்ச் 4

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த முறையிலே கால்நடை மருத்துவமனைகளுக்கும் மற்ற மருத்துவமனைகளுக்கும் சம்பந்தம் இருக்கிறதா ? கால்நடை மருத்துவமனைகளுக்கு வாங்கப்படுகிற மருந்து களுக்கும் இந்த மத்திய பர்ச்சேஸ் முறை கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இல்லை,

துவரங்குறிச்சியிலுள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண் 353.—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் துவரங்குறிச்சியில் மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு பின் அது தடை செய்யப் பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) மேற்கூறப் பட்ட கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்த பின்பு, கட்டிடம் கட்ட ஏற் பட்ட தடைகளை நீக்கி கட்டிடங்கள் யாவும் கட்டி முடிக்க 11—1—1982 நாளிட்ட மக்கள் நல்வாழ்வுத்துறை அரசாணை எண் (நிலை) 40-ல், ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மே. அ. இராசகுமார் : தலைவரவர்களே, இந்தத் தடையைப் பெறுவதற்கு அரசு அதிகாரிகளே முன்வந்திருப்பதால், அந்த அரசு அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்தத் தடைக்கு காரணம் என்னவென்றால் அது ஒரு கோவில் நிலம். 'ஹிந்து ரிலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் எண்டோமென்ட்' டிபார்ட்மென்டைச் சேர்ந்த ஒரு கோவில் நிலம் அது. அதை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்தில் இரண்டு துறைகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பின்னால் சுமூகமாகத் தீர்க்கப் பட்டு, இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டு, வேலை தொடங்க ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.